`

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 05.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அ஀தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA-21694/SCIC/2023</u>**

திரு அ. செய்யது அலி — மேல்முறையீடுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார் பதிவாளர் அலுவலகம்,
அருமனை,
கன்னியாகுமரி மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 05.09.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவின் பார்வையில் “(1) எனது மனைவி பெயரில் தங்கள் அலுவலகம் வாயிலாக 04.02.2020 அன்று 382ம் செட்டில்மெண்டு ஆவணமாக பதிவுசெய்யப்பட்டு நில உட்பிரிவு செய்த சர்வே எண்.551/5B (2) பதிவுத் துறைத் தலைவரின் சுற்றறிக்கை எண்.16168/சி1/2016 நாள் 28.07.2016 ஆகியவற்றை குறிப்பிட்டு அது தொடர்பாக தகவல்கள் கோரியுள்ளார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் 05.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்/பதில் அளித்துள்ளார்.

2. அதன் பின்னர் மனுதாரர் பிரிவு 19(1)ன் கீழ் 10.10.2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். இதற்கு மேல்முறையீட்டு அலுவலர் 11.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், அருமனை என

முகவரியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் மனுதாரர் கோரிய தகவல்களை வழங்குமாறு தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அதனை தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலர் 17.11.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் /பதில் அனுப்பியுள்ளார். அதன் பின்னர் 27.12.2023 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனு வழக்கு எண்.SA-21694/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் 04.11.2024 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கி அதன் விவரத்தினை ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். அதன் பேரில் மனுதாரர் 17.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின்மீது நேரில் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது. மனுதாரர் ஆணையத்திற்கு 24.03.2025 தேதியிட்டு அனுப்பிய கடிதத்தில் வழக்கின் விசாரணையை இன்னொரு நாளில் மாற்றி அமைத்து தரும்படி ஆணையத்திடம் கோரிக்கை வைத்ததால் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் காணொளி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 05.06.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு மனுதாரர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு ராமசாமி, பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அவர்கள், ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், 05.10.2023, 17.11.2023 மற்றும் 04.11.2024 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மனுதாரர் 07.12.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு தனது ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேலும் இன்றைய விசாரணையின்போதும் மனுதாரர் தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மனுதாரர் அங்கீகாரம் பெறப்பட்டாத மனைப்பிரிவு பதிவு தொடர்பான தகவல்களை கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் பதிவுச் சட்டப்பிரிவு 22(A) 20.10.2016ல் அமலுக்கு வந்தது என்றும் 20.10.2016 முதல் அங்கீகாரம் பெறப்பட்டாத மனைப்பிரிவுகள் பதிவு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். ஆனால் மனுதாரர் 2020ல் பதிவு நடைபெற்றுள்ளது என தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவர் அது செட்டில்மெண்ட் ஆவணம் என்று தெரிவித்தார். இதற்கு மனுதாரர் இது செட்டில்மெண்ட் ஆவணம் என்றாலும் அதில் குறிப்பிட்டுள்ள சொத்தானது அங்கீகாரம் பெறப்பட்டாத மனைப்பிரிவு என்று தெரிவித்தார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் தணிக்கைப் பிரிவிலிருந்து இது குறித்து அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும் இது

அங்கீகாரம் பெறப்பட்டாத மனைப்பிரிவு என்றும் தெரிவித்தார். இந்த அறிக்கை மனுதாரருக்கு வழங்கப்படவில்லையென்றும் மனுதாரருக்கு அந்த அறிக்கை தேவைப்படுகிறது. மேலும் மனுதாரர் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் தவறானவை என்று தெரிவித்தார். எனவே கீழ் கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**17.06.2025 அன்று மாலை 04.30 மணிக்கு மனுதாரர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று திரு ராமசாமி, சார் பதிவாளர் அவர்களை சந்திக்க வேண்டும் என்றும் மனுதாரர் தனக்கு துணையாக ஒருவரை அழைத்து செல்லலாம் என்றும் அவர் வழக்கறிஞர் அல்லாதவராக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு மனுதாரர் அலுவலகத்திற்கு வரும் பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் பிரிவு 6(1)ன்ல் கோரிய தகவல்கள் தொடர்பான ஆவணங்களை பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்றும் விசாரணையின்போது தெரிவித்த தணிக்கைப் பிரிவால் வழங்கப்பட்ட அறிக்கை மற்றும் மனுதாரர் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை அன்றைய தினமே இலவசமாக மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் அவ்வாறு வழங்கப்பட்ட விவரங்கள் தொடர்பான அறிக்கையை ஆணையத்திற்கு ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும் என பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-21694/SCIC/2023</u>**

பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்,
சார் பதிவாளர் அலுவலகம்,
அருமனை, கன்னியாகுமரி மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு அ. செய்யது அலி
5/47, ஜின்னா தெரு,
இரவிபுதூர் கடை,
காட்டாத்துறை, 629 158.
JJ/PS